தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-3-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## உளுந்தின் விலையில் பிரகாசம் இருக்காது

இந்தியாவின் மொத்த பயறு உற்பத்தியில், உளுந்து 13 சதவீதம் பங்களிக்கின்றது. மத்தியபிரதேசம், ஆந்திரபிரதேசம், உத்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை உளுந்து அதிக அளவில் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும் .இம்மாநிலங்கள் சேர்ந்து நாட்டின் மொத்த உளுந்து உற்பத்தியில் 72 சதவீதம் பங்களிக்கின்றன. வேளாண் அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, 2017-2018 ம் ஆண்டின் இலக்கைவிட அதிகளவு உளுந்து உற்பத்தி உள்ளது. (2.83 மில்லியன் டன்களுக்கு எதிராக 3.23 மில்லியன் டன்கள் உற்பத்தி)

பருப்பு வகைகளைஅதிகளவு இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தியா ஆகஸ்ட் - 2017லிருந்து பருப்பு வகை இறக்குமதியை தடை செய்துள்ளது. இறக்குமதி ஒதுக்கீட்டின் படி 2 மில்லியன் டன்கள் இதர பயறு வகைகளையும் 3 மில்லியன் டன்கள் உளுந்து மற்றும் பச்சைப் பயிரின் வகைளையும் இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இதுவரை, நம் நாடு (ஏப்ரல் 2017 முதல் நவம்பர் 2017 வரை) 4.7 மில்லியன் டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்துள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலையை விட உளுந்தின் பண்ணை விலை குறைய கடந்த ஆண்டின் அதிக இருப்பு மற்றும் நடப்பு பருவரபி பயிர்கள் நல்ல நிலையில் இருப்பதுவே ஆகும். உளுந்துவரத்தானது தமிழ்நாட்டிற்கு மியான்மர் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து ஏற்கனவே வரத் தொடங்கியுள்ளது.

உளுந்து உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு முக்கியமான மாநிலமாகும். ஒவ்வொரு வருடமும் சுமார் 4 இலட்சம் எக்டர் பரப்பளவில் உளுந்து பயிரிடப்பட்டு 2.5 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகியவை உளுந்து உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். ஏ.டி.டீ 3, ஏ.டி.டீ 4,

ஏ.டி.டீ 5, கே.கே.எம் 1, கோ 6, வம்பன் 5 மற்றும் வம்பன் 6 ஆகிய உளுந்து இரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் உளுந்து மார்ச் முதல் ஏப்ரல் வரை அதிகளவில் அறுவடை செய்யப்படுகிறது. வர்த்தக மூலங்களின் படி, வழக்கமான பயிர் பரப்பளவை விட அதிகம் இருந்தும் மஞ்சள் தேமல் நோய் காரணமாக முக்கிய பகுதிகளில் உற்பத்தி குறைந்துள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் - விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 16 ஆண்டுகளாக விழுப்புரம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய உளுந்து விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், அறுவடையின் போது (ஏப்ரல்–மே 2018) தரமான உளுந்தின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 45 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மாநில வரவு, செலவு திட்டம் - 2018 அறிவிப்பின் படி, அரசு நேரடி கொள்முதல் செய்தால் மட்டுமே உளுந்தின் பண்ணை விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி -0422-2431405

**தொழில்நுட் பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயறுவகைத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422 -2450498

மக்கள் தொடர்பு அலுவலர்